பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**23 12 2025** **6 45**

செவ்வாய்க்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

**1.** கோவா மாநிலத்தின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் விதத்தில் உள்ளாட்சித் தேர்தல் வெற்றி அமைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

**2.** மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் மருத்துவ சேவையில் மிகப்பெரிய மாற்றம் ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் கூறியுள்ளார்.

**3.** தமிழகத்தில் ஒப்பந்த செவிலியர்களுக்கு விரைவில் நிரந்தர பணி நியமன ஆணைகள் வழங்கப்படும் என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

**4.** முல்லைப்பெரியாறு அணையின் உறுதித் தன்மை ஆளில்லா தானியங்கி இயந்திரம் மூலம் இன்று பரிசோதிக்கப்படுகிறது.

**5.** இந்தியா - இலங்கை இடையிலான மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட்டின் இரண்டாவது போட்டி இன்று நடைபெறுகிறது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<>>>>

கோவா மாநிலத்தின் வளர்ச்சிக்கு உத்வேகம் அளிக்கும் விதத்தில் உள்ளாட்சித் தேர்தல் வெற்றி அமைந்துள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், மக்களின் கனவுகளை நிறைவேற்றும் விதத்தில் தேசிய ஜனநாயக கூட்டணி அரசு செயல்படும் என்று அவர் கூறியுள்ளார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா-வும் கோவா உள்ளாட்சித் தேர்தல்களில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றதற்கு அம்மாநில மக்களுக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

பிஜேபி தலைமையிலான கூட்டணி அரசுக்கு கிடைத்த மக்களின் நற்சான்றிதழ் இது என்றும் அவர் கூறியுள்ளார்.

<<<<>>>>

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக நாட்டின் மருத்துவ சேவைகள் மிகப்பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாக மத்திய

சுகாதாரத்துறை இணையமைச்சர் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் நடைபெற்ற விழா ஒன்றில் பேசிய அவர், மருத்துவ வசதிகளை மிகக் குறைந்த செலவில் சாதாரண மக்களுக்கு தரமான சிகிச்சை அளிக்கப்படுவதாக தெரிவித்தார்.

ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் 62 கோடி மக்களுக்கு 5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இலவச மருத்துவ காப்பீடு திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

மேலும் குறைந்த விலையில் மருந்துப் பொருட்கள் மற்றும் மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டு வருவதாகவும் திருமதி அனுப்பிரியா பட்டேல் தெரிவித்தார்.

<<<<>>>>

வாக்குரிமை என்பது வெறும் கடமையல்ல உரிமை என்று துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று நடைபெற்ற கிறிஸ்துமஸ் விழாவில் பேசிய அவர், ஒவ்வொருவரும் தங்களது வாக்குகள் பட்டியலில் உள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

பெயர்கள் விடுபட்டிருப்பின் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களை சந்தித்து படிவம் 6-ஐ வழங்கி வரும் 18ஆம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

<<<<>>>>

தமிழகத்தில் உள்ள 723 ஒப்பந்த செவிலியர்களுக்கு விரைவில் நிரந்தர பணி நியமன ஆணைகள் வழங்கப்படும் என்று மாநில மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சிக்குப் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழ்நாடு முதலமைச்சரின் உத்தரவின்படி ஒப்பந்த செவியலியர்களுக்கு ஊதியத்துடன கூடிய மகப்பேறு விடுப்பு வழங்கப்பட உள்ளதாகவும் கூறினார்.

மேலும் 5 புதிய செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

<<<<>>>>

தமிழகத்தில் பெண்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாக மாநில சமூக நலத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன் தெரிவித்துள்ளார்.

தூத்துக்குடி மாவட்டத்தில் சமூக நலத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் பேசிய அவர், கல்லூரியில் பயிலும் மாணவிகளுக்கு புதுப்பெண் திட்டம் மூலம் ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டு வருவதாகவும், மகளிர் உரிமைத் தொகை தற்போது விடுபட்டவர்களுக்கு வழங்கப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

ஆதரவற்ற பெண்கள், விதவைத்தாயின் மகள் மற்றும் கலப்புத் திருமணம் செய்தவர்களுக்கு 195 பயனாளிகளுக்கு தாலிக்கு 8 கிராம் தங்கத்துடன் திருமண உதவித்தொகையை திருமதி கீதா ஜீவன் வழங்கினார்.

<<<<>>>>

முல்லைப்பெரியாறு அணையின் உறுதித் தன்மையை பரிசோதிப்பதற்காக ஆளில்லா தானியங்கி இயந்திரம் மூலம் இன்று சோதனை செய்யப்படுகிறது.

இந்த சோதனையானது உச்சநீதிமன்ற வழிகாட்டுதலில் தேசிய அணைகள் பாதுகாப்பு ஆணையத்தின் ஆலோசனையின்படி மத்திய குழு விஞ்ஞானிகள் இந்த ஆய்வில் ஈடுபட உள்ளனர்.

இதற்காக நேற்று நீருக்கு அடியில் செல்லும் தானியங்கி இயந்திரத்தின் பாகங்களை இணைக்கும் பணிகளை மேற்கொண்டனர்.

அப்போது இயந்திரன் செயல்பாடுகளை அவர்கள் பரிசோதித்தனர்.

<<<<>>>>

அமெரிக்காவின் **Blue Bird** செயற்கைக்கோள் நாளை காலை **8.54** மணிக்கு ஸ்ரீஹரிகோட்டா ஏவுதளத்தில் இருந்து விண்ணில் செலுத்தப்படுகிறது.

இதற்கான கவுண்ட்டவுன் இன்று தொடங்கும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

**LVM3-M6** ராக்கெட் மூலம் இந்த செயற்கைக்கோள் விண்ணில் ஏவப்படுகிறது.

இந்த செயற்கைக்கோள் மூலம் தொலைதூர கிராமங்களுக்கு மொபைல்போன் இணைப்பு மற்றும் அதிவேக இணையசேவையை இந்த செயற்கைக்கோள் வழங்கும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தேசிய விவசாயிகள் தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

விவசாயிகளின் வாழ்க்கைத் தரம் உயர வங்கிகள் துணைபுரிகின்றன.

சேலம் உட்பட **8** மாவட்டங்களில் **140** கிளைகள் மூலம் விவசாயிகளுக்கு பயிர்க் கடன் வழங்கப்பட்டுள்ளதாக பாரத ஸ்டேட் வங்கியின் துணைப் பொதுமேலாளர் திரு. பால ஆனந்த் தெரிவித்துள்ளார்.

**(Voice Byte - Bala Anand - 35 Sec)**

இந்த வங்கிக் கடன் தமது வியசாயப் பணிகளுக்கு பேருதவியாய் இருப்பதாக பயனாளி ஒருவர் தெரிவித்தார்.

**(Voice Byte - Farmer - 31 Sec)**

<<<<>>>>

கிறிஸ்துமஸ் பண்டிகை நாளை மறுநாள் கொண்டாடப்பட உள்ளது.

இந்நிலையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் கிறிஸ்துமஸ் கொண்டாட்டங்கள் களைகட்டத் தொடங்கியுள்ளன.

இதுகுறித்து எமது செய்தியாளர் தரும் தகவல்...

**(Voice Byte - Kumaran - 31 Sec)**

<<<<>>>>

***இருவரிச் செய்திகள்***

அமெரிக்க கடற்படை உலகியேயே மிகப்பெரிய மற்றும் அதிநவீன போர்க்கப்பலை தயாரிக்க இருப்பதாக அமெரிக்க அதிபர் திரு. டோனல்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

------------

ரஷ்யா - யுக்ரைன் இடையிலான அமைதி ஒப்பந்தத்திற்கான வரைவு அறிக்கையில் யுக்ரைனின் பல்வேறு கோரிக்கைகள் இடம்பெற்றுள்ளதாக அந்நாட்டு அதிபர் திரு. ஜெலன்ஸ்கி கூறியுள்ளார்.

------------

ஹரியானாவில் அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் ஊழியர்களுக்கான வேலை நேரம் 9 மணி நேரத்தில் இருந்து 10 மணி நேரமாக உயர்த்தும் சட்டத்திற்கு அம்மாநில சட்டப்பேரவை ஒப்புதல் வழங்கியுள்ளது.

------------

தூத்துக்குடி வ.உ. சிதம்பரனார் துறைமுகத்தில் செயல்படுத்த இருக்கும் வெளி துறைமுக திட்டம் தென்னிந்தியாவிற்கான முக்கிய கடல் வர்த்தக நுழைவு வாயிலாக இருக்கும் என்று தூத்துக்குடி துறைமுக ஆணையர் தெரிவித்துள்ளார்.

------------

தருமபுரி மாவட்டம் நல்லம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள மானியதள்ளி கிராம ஊராட்சி இரண்டாகப் பிரிக்கப்பட்டதற்கான அரசாணையை மாவட்ட ஆட்சியர் திரு. சதீஷ் வெளியிட்டுள்ளார்.

------------

திருவண்ணாமலை மாவட்டத்தில் இந்திய தேர்தல் ஆணையத்தின் துணைத் தேர்தல் ஆணையர் தலைமையில் வாக்காளர் பட்டியல் சிறப்புத் தீவிர திருத்தம் குறித்த மண்டல அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் நடைபெற்றது.

------------

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் வேளாண் நிலங்களை சேதப்படுத்தி வரும் காட்டுப் பன்றிகளை கட்டுப்படுத்த வனத்துறையினர் விவசாயிகளுடன் ஆலோசனை நடத்தினர்.

------------

நாமக்கல் மண்டலத்தின் முட்டையின் பண்ணைக் கொள்முதல் விலை 5 காசுகள் உயர்த்தப்பட்டு 6 ரூபாய் 40 காசுகளாக விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது என்று தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு மண்டல அலுவலகம் அறிவித்துள்ளது.

------------

பெரம்பலூரில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் திருமதி மிருனாளினி தலைமையில் வரும் வெள்ளிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

------------

*விளையாட்டுச் செய்திகள்*

இந்தியா - இலங்கை இடையிலான மகளிர் ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட்டின் இரண்டாவது போட்டி இன்று நடைபெறுகிறது.

5 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இந்தியா முதல் போட்டியில் வெற்றி பெற்றுள்ளது.

**<<<<The End>>>>**